*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

# களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International

DOI: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026**, **p172-178** | Available online at: www.ngmtamil.in
*Original Research Paper*

# கலிங்கத்தின் மரபு வழி ஆடற்கலை ஒடிசிநடனம்

## The heritage traditional dance form of Kalinga: Odissi dance

**கலாநிதி தக்ஷாயினி பரமதேவன்,**

சிரேஷ்ட விரிவுரையாளர், நடனநாடகத்துறை, சுவாமி விபுலாநந்தா அழகியற்கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**Thakshayiny Paramadevan,**

*Senior Lecturer in Dance, Department of Dance Drama and Theatre Arts,*
*Swamy Vipulananda Institute Of Aesthetic Studies, Eastern University Srilanka.*
*Email: thakshayinip@esn.ac.lk*

*Article history*
Received: 20-07-2026
Revised: 25-07-2026
Accepted: 30-07-2026
**Published: 02-08-2026**

*Corresponding Author
Email: *thakshayinip@esn.ac.lk*
Tel: *+919600248107*

**Abstract:** Originating in the ancient region of Kalinga in Odisha, Odissi is one of India's oldest classical dance traditions—recognized as one of the country's eight official classical dances—renowned globally for its fluid body movements, sculptured postures, rich emotional expressions (abhinaya), and spiritual depth. Deeply tied to temple worship traditions, particularly in the iconic Jagannath, Konark Sun, and Lingaraj temples, the art form draws its foundational posture, hand gestures, and footwork from temple carvings, while historically preserved through the Mahari (temple dancers) and Gotipua (young boys performing in female attire) traditions. Characterized artistically by its signature postures like Tribhanga (a three-bend stance) and Chauka (a stable, square posture representing divine energy), Odissi encompasses pure dance (Nritta), expressive dance (Nritya), and dramatic enactment (Natya) to convey emotions ranging from devotion to heroism. Despite declining under British rule, the art form underwent a significant revival post-Independence through the efforts of scholars and gurus, evolving today into a internationally taught and performed classical art. This study explores the historical, religious, aesthetic, and cultural evolution of Odissi, analyzing its interconnections with temple architecture, sculpture, and devotional literature, while emphasizing the vital need for its preservation, academic research, and global dissemination as a living testament to Kalinga's rich cultural heritage.

**Keywords:** *Temple Dance Tradition, Mahari Tradition, Gotipua Tradition, Jagannath Temple, Konark Sun Temple, Abhinaya, Tribhanga, Chauka, Cultural Heritage.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச் சுருக்கம்**

ஒடிசி நடனம் இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில், பண்டைய கலிங்க நாட்டில் தோற்றம் பெற்ற மிகப் பழமையான செவ்வியல் நடன மரபுகளில் ஒன்றாகும். இந்தியாவின் எட்டு செவ்வியல் நடன வடிவங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்நடனம், தனது அழகிய உடலசைவுகள், சிற்ப வடிவங்களை ஒத்த நிலைப்பாடுகள், ஆழமான அபிநய வெளிப்பாடு மற்றும் ஆன்மிகச் சிந்தனைகளை பிரதிபலிக்கும் தன்மையால் உலகளவில் சிறப்புப்பெற்றுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட ஒடிசி, கலிங்க நாகரிகத்தின் கலை, சமயம்,பண்பாடு மற்றும் சமூக வாழ்வியலின் முக்கிய வெளிப்பாடாக விளங்குகிறது. ஒடிசி நடனத்தின் தோற்றமும் வளர்ச்சியும் கோயில் வழிபாட்டு மரபுகளுடன் நெருங்கிய தொடர்படையதாகும். குறிப்பாக பூரி ஜகந்நாதர் ஆலயம், கோணார்க் சூரியன் கோயில் மற்றும் லிங்கராஜர் ஆலயம் போன்ற புகழ்பெற்ற கோயில்களின் சிற்பங்களில் காணப்படும் நடன நிலைப்பாடுகள், இந்நடனத்தின் அடிப்படை இலக்கணங்களாக அமைந்துள்ளன. இக்கோயில்களின் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள், ஒடிசி நடனத்தின் உடலமைப்பு, கைமுத்திரைகள், காலசைவுகள் மற்றும் அபிநய நுட்பங்களைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. ஒடிசி நடன வளர்ச்சியில் மகாரி மரபும், கோடிபுவா மரபும் முக்கியமான பங்காற்றியுள்ளன. மகாரிகள் கோயில்களில் தெய்வ வழிபாட்டின் ஒரு பகுதியாக பக்தி உணர்வுடன் நடனமாடினர். பின்னர் சமூக மாற்றங்களால் மகாரி மரபு சீர்குலைந்தபோதும், பெண் வேடமணிந்த சிறுவர்கள் ஆடிய கோடிபுவா மரபு ஒடிசி நடனத்தைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சென்றது. இதன் மூலம் ஒடிசி தனது மரபு, இலக்கணம் மற்றும் கலைநயத்தைத் தொடர்ந்து பேணிக் கொண்டது. ஒடிசி நடனத்தின் முக்கியமான உடலமைப்பு அம்சங்களாக திரிபங்கா (Tribhanga) (Chauka) ஆகிய நிலைப்பாடுகள் மற்றும் சௌகா (Chauka) ஆகிய நிலைப்பாடுகள் விளங்குகின்றன. திரிபங்கா உடலின் மூன்று பகுதிகளில் வளைவை உருவாக்கும் அழகிய நிலைப்பாடாகவும், சௌகா உறுதி, சமநிலை மற்றும் தெய்வீக ஆற்றலை வெளிப்படுத்தும் நிலைப்பாடாகவும் கருதப்படுகிறது. ஒடிசி நிகழ்த்துகை நிருத்தம் (தூய நடனம்), நிருத்தியம் (அபிநய நடனம்), நாட்டியம் (நாடக வெளிப்பாடு) ஆகிய மூன்று கூறுகளையும் உள்ளடக்கியதாக அமைகிறது. முகபாவங்கள், கைமுத்திரைகள், தாள அசைவுகள் மற்றும் இசையுடன் ஒருங்கிணைந்த உடலசைவுகள் மூலம் பக்தி, காதல், கருணை மற்றும் வீர உணர்வுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கோயில் நடன மரபுகள் பல்வேறு காரணங்களால் வீழ்ச்சியடைந்தன. இருப்பினும் இந்திய விடுதலைக்குப் பின்னர் பல அறிஞர்கள், கலைஞர்கள் மற்றும் குருமார்கள் இணைந்து ஒடிசி நடனத்தை மறுமலர்ச்சியடையச் செய்தனர். இன்று ஒடிசி உலகின் பல்வேறு நாடுகளில் கற்பிக்கப்பட்டு நிகழ்த்தப்படும் உயரிய செவ்வியல் கலை வடிவமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

பல்கலைக்கழகங்கள், கலைக் கல்வி நிறுவனங்கள் மற்றும் பண்பாட்டு அமைப்புகள் வழியாக இக்கலை பாதுகாக்கப்பட்டு பரப்பப்பட்டு வருகிறது.இவ்வாய்வு, கலிங்கத்தின் மரபுவழி

ஆடற்கலையான ஒடிசி நடனத்தின் வரலாற்றுப் பின்னணி, சமய அடித்தளம், கலைநயம், தொழில்நுட்ப அமைப்பு மற்றும் பண்பாட்டு முக்கியத்துவத்தை ஆராய்கிறது. மேலும், கோயில் கட்டிடக்கலை, சிற்பக்கலை, பக்தி இலக்கியங்கள் மற்றும் நிகழ்த்துக் கலை மரபுகள் ஒடிசி நடனத்தின் வளர்ச்சியில் ஏற்படுத்திய தாக்கத்தையும் பகுப்பாய்வு செய்கிறது.

இன்றைய உலகமயமாக்கல் சூழலில் ஒடிசி நடனத்தின் பாதுகாப்பு, கல்வி, ஆய்வு மற்றும் சர்வதேச பரவல் ஆகியவற்றின் அவசியத்தையும் எடுத்துரைக்கிறது. எனவே, ஒடிசி நடனம் ஒரு கலை வடிவம் மட்டுமல்லாது, கலிங்கத்தின் ஆன்மிகம், வரலாறு, பண்பாடு மற்றும் கலை மரபுகளை உயிர்ப்புடன் தாங்கி நிற்கும் அரிய பண்பாட்டு பாரம்பரியமாகும்.

**திறவுச்சொற்கள் :** கோயில் நடன மரபு, மகாரி மரபு, கோடிபுவா மரபு, ஜகந்நாதர் ஆலயம், கோணார்க் சூரியன் கோயில், அபிநயம், திரிபங்கா, சௌகா, பண்பாட்டு மரபு,

## முன்னுரை

பண்டைய கலிங்கம் பரந்துபட்ட ஒரு திராவிட பூமியாக விரிவுபட்டிருந்தது சேந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும் என வரும். தொல்காப்பிர் சூத்திரத்தைச் சான்று படுத்தி தமிழ் வழங்கு நாடுகளுள் ஒன்றாக கலிங்கமும் இருந்ததேன ஆய்வாளர்கள் கருதுவர். கி.மு. 7ம். நூற்றாண்டு தொடக்கம் உயர்ந்த பண்பாடும் நாகரிகமும் கொண்ட மக்கள் வாழ்ந்த நாடாக கலிங்கம் திகழ்ந்துள்ளமையை வரலாறு உறுதிசெய்கின்றது. இலங்கை உட்பட பல தென்கிழக்காசிய நாடுகள் கலிங்கரின் செல்வாக்கில் இறுக்கமாக பிணைப்புண்டிருந்தமை வரலாற்று உண்மையாகும்.

கலிங்கத்தில் ஆண்டுகால மரபுவழி சார்த்த ஆடற்கலையாக வளர்ந்து செவ்வியல் வடிவம் பேற்றதே ஓடிசியாகும் கலிங்கத்தின் ஒரு பெருநிலப் பரப்பாக இன்று மிளிர்கின்ற ஓரிசாவின் தேசியத் தன்மை கொண்டே இந் நடனமும் ஓரிசி என அழைக்கப்பட்டது. ஓரிசியே ஓடிசியானது தமிழ்நாட்டு ஆலயங்களில் சதிர் என்ற பெயரில் தேவரடியார் எனும் சிறப்புப் பெயர்கொண்ட கணிகையர்மூலம் உருத்திர வழிபாட்டுடன் இணைந்ததாக பரதக் கலை வளர்க்கப்பட்டதோ அதே போன்றதாக கலிங்க நாட்டு ஆலயங்களில் மகரி என்ற பெண் கலைஞர்களாலும் கோத்திப்புவர் என்ற ஆண் கலைஞர்களாலும் நடன வழிபாடாக வளர்த் தெடுக்கப்பட்ட ஆடற்கலைகளின் ஒன்றிணைப்பாக ஓடிசி அடையாளப் படுத்தப்படுகின்றது. இதில் மகரிப் பெண்கள் எனப்படுவோர் பல நூறு ஆண்டுகால வரலாற்றுக்குரியவர்கள் என்பதனை ஆய்வுகள் வெளிப்படுத்தும். கோத்திப்புவா எனும் ஆண் கலைஞர் சுமார் நாநூறு ஆண்டுகால வரலாற்றுக்குரியவர்கள் தஞ்சைப் பெரிய கோயிலில் அனைத்து வசதி வாய்ப்புக்களுடன் பரதக்கலை வளர சோழமன்னர்கள் பெரும்பங் காற்றியமைபோன்றே பூரி ஜெகன்நாதர் ஆலயத்தின் மூலம் ஓடிசி வளர கலிங்க மன்னர்கள் பேருதவி புரிந்தனர். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்றுகுரியதென கருதப்படும் ஒடிசிபற்றிய ஆய்வுகளில் பரதமுனிவர் தனது நாட்டியசாஸ்த்திரத்தில் குறிப்பிடும் ஒட்டா மகதி எனும் நடனக்கலை தொடர்புறுத்தப்படுவதைக் காணலாம். பண்டைய கலிங்கம் ஒட்டா எனப்படுவதாகவும் ஒட்டாவே பின்னர் ஒடிசியானதெனவும் அதனடிப்படையில் இந்நடனம் பெயர் பெறுவதாகவும் குறிப்பிடுவர். மேலும் மகதிக் கலைஞர்களேபின்னர் மகரியானரெனவும் கூறுவர். கி.மு 2 ம் நூற்றாண்டுக்குரியதான ஒரிசாவின் தலைநகர் புவனேஸ்வரை அண்மித்த உதயகிரி- ராணிகும்பா குகைக்கோவிலில்

செதுக்கப்பட்டுள்ள நாட்டியக்கார் மற்றும் வாத்தியககாரர்களின் வனப்புமிக்க சிற்பங்களை அவற்றின் திரிபங்க நிலைத் தன்மை கொண்டு ஒடிசியின் பண்டைய பெருமையினை நம்மால் நிலைநிறுத்த முடிகின்றது. நாட்டியக்கலை கலிங்கத்தின் மிக்க செல்வாக்கினை எட்டியகாலமாக கி.பி 7ம் நூற்றாண்டினைத் தொடர்ந்த காலம் கோவில்களின் கட்டிடக் கலையில் நடராஜர் விதாங்க போன்றோரது தாண்டவ வடிவிலமைந்த கோலங்களும் அழகும் நாட்டியம் பெண்டிரின் அபிநயத் தோற்றங்களும் சிற்பம்சங்கள் இடம்பெற்றுள்ளன. கோணரக் கோவிலில் வடிக்கப்பட்டுள்ளஉள்ளத்தைக் கொள்ளும் அழகிய சிற்ப அம்சங்கள் காலறவையேன்லாம் ஓடிசியின் வளர்ச்சியில் மகரி எனப்படும் மகளிரின் வாழ்க்கையும் பின்னிப்பிணைந்தேயுள்ளது. கி. பி 9ம்நூற்றாண்டைப் பொறுத்தவரை இக்காலம் மிக மேலோங்கயதாகவேயுள்ளது. கோவில்களில் ஆடற்சேவைக்காக மகரிப் பெண்களை மன்னர்கள் நியமித்ததோடு அவர்களை உயராநிலையிலும் பேணினர். இக்காலத்தே கலிங்நத்தில் பௌத்தம் மற்றும் சமணதாதின் செல்வாக்கு சரிவுற்றதோடு இந்து மதம் துரித வளர்ச்சியை நோக்கி பயணிக்கலானது. தஞ்சையில் சோழப் பேரரசன் இராசராசனால் அமைக்கப்பட்ட பெருங்கோவில் பரத நாட்டியத்தின் புகலிடமாக மிளிர்ந்ததைப் போல சோழகங்க தேவனால் அமைக்கப்பட்ட பூரி ஜெகன்நாதர் ஆலயமும் நாட்டியத்தின் வளர்ச்சியில் அரும் பங்காற்றியது. அனங்க தேவனால் அவ்வாலயத்தே கட்டப் பட்ட நாடக மந்திர் எனப்படும் அழகிய நிருத்த மண்டபம் விழாக் காலங்கள் மற்றும் வழிபாட்டு நிகழ்வுகளில் நர்த்தகிகளின் ஆடல் அரங்கமாக செயல்பட்டு வந்துள்ளதோடு பலநூறு ஆண்டுகளைக் கடந்த நிலையிலும் இன்று நீடித்து நிற்பது ஒரு வரலாற்றுப் பெருமையாகவே அமையும்.

**தோற்றம்**

ஓடிசியின் பொதுத் தோற்றமானது சதிரையொத்ததாகவேயுள்ளது. இரண்டிலுமே அரைமண்டி ஒரு முக்கிய இடத்தைப்பிடிக்கும். எனினும் சதிரில் துவிபங்க நிலையே பெரும்பாலும் கையாளப்படும் தன்மையில் ஒடிசியில் திரிபங்க நிலை அதிகளவு இடத்தைப் பிடித்துக் கொள்கின்றது. உடல் மூன்று வளைவுகாக அமைவுறுவதே திரிபங்க நிலையாகும். நிகழ்த்துகையின்போது தலையொரு பக்கமாகவும் தோளிலிருந்து இடுப்புவரையான பகுதி ஒரு பக்கமாகவும் இடுப்பிலிருந்து பாதம் வரையான பகுதி ஒரு பக்கமாகவும் முழு உடலும் மூன்றாக ஒடிக்கப்படும் வடிவத்தை இதன் வெளிப்பாடு கொண்டதாக அமையும். கலிங்கநாட்டுச் சிற்பக் கலையிலும் இத் தோற்றப்பாடே முக்கியத் துவம் பெறுகின்றது. நடன வகைகளைப் பொறுத்த வரை ஓடிசி ஆடற்கலையானது நிருத்தம், நிருத்தியம் ஆகிய இரண்டினையும் குறித்த வெளிப்பாடாகக் கொண்டுள்ளமை தெரியும். சதிரின் அழுத்தத்தினையும் மணிப்புரியின் குழைவினையும் இது பொதுத் தன்மையாகக் கொண்டுள்ளமை அவதானிப்புக்குரியதெனினும் முக பாவனையைப் பொறுத்தவரை இது மணிப்புரியிலும் மேலோங்கியதாகவே தென்படுகின்றது. தலை, இடை, கால் மூன்றையும் நேர்த்தியாக அசைத்தாடும் திரிபங்கத் தன்மையில் வத்யசலனம் எனப்படும் இடுப்பசைவே ஓடிசியின் சிறப்பம்சம் எனலாம். விநாயகருக்கும் ஏனைய தெய்வங்களுக்கும் பாடப்படும் மங்கள சரணத்துடன் ஆரம்பமாகும் இந்நடனம் பின்னர் பூமித் தாய்க்கும் சபையோருக்கும் தொடர்ந்து பக்கவாத்தியக்காரர் மற்றும் பாடகர்களுக்கும் வணக்கம் செலுத்துவதோடு நிறைவுறும். ஒடிசியின் நடன நிகழ்வுகளில் திரிபங்கத்தடன் ஏனைய பிரிவுகள சௌகம், சைநிருத்தியம், பல்லவி, அபிநயம், மோஷியம் என்பன இடம்பெறுகின்றன தோள், முழங்கை, முழங்கால், கணைக்கால் அங்க வளைவுகளை அமைத்து ஆடுவதே சௌகம் எனப்படும் மிகுந்த விசையோடு பல கோலங்களில் மாறி மாறி ஆடுவது

சைநிருத்தியம் ஆகும் ராகம், தாளத்திற்கேற்ப அசைந்து அசைந்து ஆடுவது பல்லவியாகும் பாடல்களுக்கேற்ப அபிநயித்து ஆடுவது அபிநயமாகும் கடினம் மிக்கதால் இராகங்களில் வெவ்வேறு பாவங்களுடன் விசையோடு ஆடுவது மோஷிய ஆரும்

பல்லாண்டுகாலமாக மூன்று வெவ்வேறான வழிகளில் ஒடிசியில் வளர்ச்சி முன்னெடுக்கப்பட்டிருப்பது ஆய்வுகளில் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

1.ஆலயங்களினூடாக தேவதாசி முறையில் வளர்ச்சியுற்ற மகரிப் பெண்டிரில் ஆடல்கள்

2 மன்னர்களின் அரண்மனைகளில் தொடராக இடம்பெற்று வளர்ச்சியுற்ற நர்த்தகிகளின் ஆடல்கள்

3.பெண்களுக்குரிய ஆடை அணிகளை அணிந்து ஆடும் கோத்திப்புவா எனப்படும் இளைஞர்களான ஆண் கலைஞர்களால் வளர்ச்சியுற்ற ஆடல்கள் என்பவையே அவை .

**ஒடிசி நடனத்தின் ஆட்டமுறை**

ஒடிசி நடனம் இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் தோன்றிய மிகப் பழமையான செவ்வியல் நடன மரபுகளில் ஒன்றாகும். இந்நடனத்தின் ஆட்டமுறை, நாட்டியசாஸ்திரக் கோட்பாடுகளையும் கலிங்கத்தின் கோயில் வழிபாட்டு மரபுகளையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஒடிசி நடனம் வெறும் பொழுதுபோக்கு நிகழ்த்துக் கலையாக மட்டுமன்றி, பக்தி, ஆன்மிகம், அழகியல் மற்றும் பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் வழிபாட்டுக் கலையாகவும் விளங்குகிறது. இதன் ஆட்டமுறையில் உடலின் நெகிழ்வுத்தன்மை, சமநிலை, முகபாவங்கள், கைமுத்திரைகள், காலடி வேலைப்பாடுகள் மற்றும் இசை ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்த முறையில் இடம்பெறுகின்றன.

ஒடிசி நடனத்தின் ஆட்டமுறையின் அடிப்படை அம்சங்களாக திரிபங்கா (Tribhanga) மற்றும் சௌகா (Chauka) ஆகிய இரண்டு முக்கிய உடலமைப்புகள் கருதப்படுகின்றன. திரிபங்கா நிலையில் தலை, மார்பு மற்றும் இடுப்பு ஆகிய மூன்று பகுதிகளிலும் வளைவு ஏற்படுத்தப்பட்டு பெண்மையின் மென்மையும் உடலழகும் வெளிப்படுத்தப்படுகின்றன. சௌகா நிலை சதுர வடிவ உடலமைப்பைக் கொண்டதாக அமைந்து, உறுதி, சமநிலை மற்றும் தெய்வீக சக்தியின் அடையாளமாகக் கருதப்படுகிறது. இந்த இரண்டு நிலைப்பாடுகளே ஒடிசி நடனத்தின் தனித்துவத்தையும் அதன் அழகியலையும் எடுத்துக்காட்டுகின்றன.

ஒடிசி நடன நிகழ்ச்சி பொதுவாக மங்களாசரணம், பட்டு (Batu), பல்லவி, அபிநயம், மோக்ஷம் ஆகிய ஐந்து பகுதிகளாக அமைகிறது. மங்களாசரணம் நிகழ்ச்சியின் தொடக்கமாக அமைந்து, பூமாதேவி, குரு, தெய்வம் மற்றும் பார்வையாளர்களுக்கு வணக்கம் செலுத்தப்படுகிறது. இது நிகழ்ச்சிக்கான ஆன்மிகத் தயாரிப்பாகக் கருதப்படுகிறது. இதனைத் தொடர்ந்து இடம்பெறும் பட்டு அல்லது பட்டு நிருத்தம் தூய நடனப் பகுதியைக் கொண்டதாகும். இதில் அபிநயத்திற்கு இடமின்றி, தாளம்,

**DOI: https://doi.org/10.63300/kijts06022026.18**

கைமுத்திரைகள், காலடி அசைவுகள் மற்றும் உடல் நிலைப்பாடுகள் சிறப்பாக வெளிப்படுத்தப்படுகின்றன.

பல்லவி ஒடிசி நடனத்தின் மிகவும் கலைநயமிக்க பகுதியாகும். குறிப்பிட்ட ஒரு இராகத்தின் அடிப்படையில் மெதுவாக ஆரம்பித்து படிப்படியாக வேகமடைந்து பல்வேறு நடன அசைவுகள் விரிவாக்கப்படுகின்றன. இப்பகுதியில் கலைஞரின் உடல் கட்டுப்பாடு, சமநிலை, நளினம் மற்றும் தொழில்நுட்பத் திறமை முழுமையாக வெளிப்படுகிறது. இசை, தாளம் மற்றும் உடலசைவுகள் ஒன்றோடொன்று இணைந்து அழகிய காட்சியமைப்பை உருவாக்குகின்றன.

அபிநயப் பகுதி ஒடிசி நடனத்தின் உயிர்நாடியாகக் கருதப்படுகிறது. இதில் கவிதைகள், பக்திப் பாடல்கள் மற்றும் புராணக் கதைகள் முகபாவங்கள், கண் அசைவுகள், கைமுத்திரைகள் மற்றும் உடல் மொழியின் மூலம் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக இராதை–கிருஷ்ணர் தொடர்பான பக்திப் பாடல்கள், கீத கோவிந்தம் போன்ற இலக்கியங்கள் ஒடிசி அபிநயத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. நவரசங்கள், பாத்திர உணர்வுகள் மற்றும் பக்தி நிலைகள் இயல்பாக வெளிப்படுத்தப்படுவதால் பார்வையாளர்கள் கதைச் சூழலுடன் ஒன்றிப்போகும் அனுபவத்தைப் பெறுகின்றனர்.ஒடிசி நடனத்தில் கைமுத்திரைகள் (முத்திரைகள்), கண் அசைவுகள், கழுத்து அசைவுகள், தலை அசைவுகள் மற்றும் காலடி வேலைப்பாடுகள் அனைத்தும் நாட்டியசாஸ்திர விதிகளுக்கு ஏற்ப அமைந்துள்ளன. ஒவ்வொரு கைமுத்திரையும் ஒரு குறிப்பிட்ட பொருளையோ உணர்வையோ வெளிப்படுத்துகிறது. காலடிச் சுவடுகள் தாளத்துடன் துல்லியமாக இணைந்து நிகழ்த்தப்படுகின்றன. உடலின் ஒவ்வொரு உறுப்பின் அசைவும் இசையின் ஓட்டத்தோடு இணைந்து அழகிய கலை வடிவத்தை உருவாக்குகிறது. ஒடிசி நடனத்தின் இறுதிப் பகுதியான மோக்ஷம், ஆன்மா இறைவனுடன் ஒன்றிணையும் விடுதலை நிலையைச் சுட்டிக்காட்டுகிறது. இப்பகுதியில் கலைஞர் உற்சாகமான மற்றும் வேகமான அசைவுகளின் மூலம் நிகழ்ச்சியை நிறைவு செய்கிறார். இது பார்வையாளர்களுக்கு ஆன்மிக நிறைவையும் கலைநயமிக்க அனுபவத்தையும் வழங்குகிறது.

இன்றைய காலத்தில் ஒடிசி நடனத்தின் ஆட்டமுறை பாரம்பரிய அடித்தளத்தைப் பேணிக்காத்து நவீன மேடைத் தேவைகளுக்கு ஏற்ப வளர்ச்சி பெற்றுள்ளது. இருப்பினும் அதன் அடிப்படை இலக்கணங்கள், உடல் நிலைப்பாடுகள், அபிநய மரபுகள் மற்றும் சமயப் பின்னணி ஆகியவை மாற்றமின்றி பாதுகாக்கப்பட்டுள்ளன. உலகின் பல்வேறு நாடுகளில் ஒடிசி கற்பிக்கப்பட்டு நிகழ்த்தப்படுவதன் மூலம் கலிங்கத்தின் பண்பாட்டு மரபும் இந்திய செவ்வியல் நடன மரபும் உலக அரங்கில் சிறப்பாகப் பரவுகின்றன. எனவே, ஒடிசி நடனத்தின் ஆட்டமுறை கலைநயம், ஆன்மிகம், உடல் ஒழுக்கம் மற்றும் பண்பாட்டு மரபு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் தனித்துவமானது.

**முடிவுரை**

16ம் நூற்றாண்டுவரை மிகவும் உன்னத நிலையை எட்டியிருந் ஒடிசி ஆடற்கலை, ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் இந்திய நாட்டில் ஏனை ஆடற்கலைகளுக்கு ஏற்பட்ட மிகப் பாரிய பின்னடைவைப்போல் புறம்தள்ளப்பட்ட ஆடற்கலையாக நலிவுறலாயிற்று. நாட்டிய மகளிர் சமூக

நிலையில் ஒதுக்கப்பட்டோராயினர். பூரி ஜெகன்நாதர் ஆலயத்தின் மரபுவழி கலைஞர்களான மகரிப் பெண்டிரின் ஆடல்கள் இல்லாதொழிக்கப்பட்ட அரண்மனை நர்த்தகிகளின் செயல்பாடும் படிப்படியாக ஒழிந்த கோத்திப்புவா ஆடல்கள் நிலைபெற்றிருந்தாலும் அதனால் இந்நிலை சுதந்திரத்தின் பின்னர் துரிதகெதியல் வளர்ச்சி பெறலாயிற்று.

பண்டைய இந்திய பெருநிலப் பரப்பின் வரலாற்றுப் பெருமைமிக் கலிங்க தேசம் பல நூறு ஆண்டுகளாக தனது மரபுவழி ஆடற்கலையென கட்டிக்காத்து செம்மைப்படுத்தி வளர்த்தெடுத்த ஒடிசி நடனம் இன்றைய தென்னாசிய ஆடற்கலைகளுள் செவ்வியல் நடனமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை.

**உசாத்துணை நூல்கள்**

[1]. கபிலா வாத்ஸ்யாயன். (2012). இந்திய நாட்டியக் கலை. (தமிழாக்கம்). சென்னை: கலைஞன் பதிப்பகம்.

[2]. சண்முகசுந்தரம், சு. (2015). தமிழர் வளர்த்த ஆடற்கலை. சென்னை: காவ்யா பதிப்பகம்.

[3]. சாம்பமூர்த்தி, பி. (2005). இந்திய இசையும் நாட்டியமும். சென்னை: இந்திய இசை வெளியீடு.

[4]. சுப்பிரமணியம், வி. (2008). நாட்டியக் கலை வரலாறு. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

[5]. நடராசன், க. (2013). நாட்டிய சாஸ்திரமும் இந்திய நடன மரபுகளும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

[6]. பாஸ்கரன், ஆர். (2010). இந்திய செவ்வியல் நடனங்கள். சென்னை: மணிவாசகர் பதிப்பகம். சண்முகசுந்தரம், சு. (2015). தமிழர் வளர்த்த ஆடற்கலை. சென்னை: காவ்யா பதிப்பகம்.

[7]. Banerji, P. (1986). Odissi dance. Abhinav Publications.

[8]. Kapila Vatsyayan. (1977). Classical Indian dance in literature and the arts. Sangeet Natak Akademi.

[9]. Kapila Vatsyayan. (2007). The square and the circle of the Indian arts. Roli Books.

[10]. Sunil Kothari. (1990). Odissi. Abhinav Publications.